சார்பு நீதிமன்றம், மேலூர்

MCOP .No.13/2025

| | |
|---|---|
| பெயர் | : மாதேஷ் |
| தகப்பனார் பெயர் | :ராமன் |
| கணவர் பெயர் | : |
| வயது | : 48 |
| கிராமம் | : ரங்கசாமிபுரம், |
| வட்டம் | : மேலூர், மதுரை |
| தொழில் | : கூலி |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
12.08.2026

ம.சா. **2** முதல் விசாரணை**:**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். ஆதார் அட்டை ஒளிநகல் ம.சா.ஆ.16 ஆக அசலுடன் ஒப்பிட்டுப் பார்த்து குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வரவில்லை. மலைச்செல்வி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னை விபத்து தொடர்பாக காவலர்கள் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. விபத்தின்போது நான் மேற்கு திசையில் இருந்து கிழக்குத் திசை மார்க்கமாக நான் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். அப்போது எதிர் திசையில் இருந்து இருசக்கர வாகனத்தில் நாகப்பிரபு, அழகர்சாமி, ஜகன் ஆகியோர் எதிர்

திசையில் வந்துகொண்டிருந்தார்கள். அப்போது நாகப்பிரவு இருசக்கர வாகனத்தை வண்டி உலட்டி அதில் பயணித்த அழகர்சாமியின் மீது வண்டி விழுந்துவிட்டது. நான் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் கொடுத்தேன். விழுந்த அழகர்சாமி பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தார். நான் வீட்டிற்கு போன் செய்து தகவல் கொடுத்தேன். 5 நாள்கள் கழித்து அழகர்சாமி இறந்ததாக தெரிய வந்தது. இருசக்கர வாகனம் 3 நபர்கள் பயணிக்கக் கூடாது என்பது தெரிந்தும் பயணித்தாதால் தான் விபத்து நடந்தது என்றும் 2 நபர்கள் சென்றிருந்தால் விபத்தை தவிர்த்து இருக்கலாம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு வேண்டப்பட்ட நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தின் போது எதிர் திசையில் வந்த நாகப்பிரபு மற்றும் விபத்தில் இறந்த அழகர்சாமி தலைக்கவசம் அணிந்திருந்தார்களா என்றால் இல்லை. இறந்த அழகச்சாமிக்கு மூக்கு, கண்ணம் மற்றும் பின் மண்டையில் அடிபட்டு இருந்தது.

மறுவிசாரணை இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.08.12 03:00:46 +0530

Sub Judge,
Melur